செ. கு. எண்:031 நாள் :28.01.2014

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை –28.1.2014

கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர் காவல் கட்டுப்பாட்டு அறையில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. C. ராஜா அவர்கள் 20.12.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N.கணேசன் அவர்கள் 23.12.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகரம், திலகர் திடல் காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. ஜாஹீர் ஹுசைன் அவர்கள் 23.12.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

தூத்துக்குடி மாவட்டம், கழுகுமலை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. S.பெரியசாமி அவர்கள் 19.12.2013 அன்று கரடிகுளம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 24.12.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

கன்னியாகுமரி மாவட்டம், புதுக்கடை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N.முருகன் அவர்கள் 24.12.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. M.சண்முகம் அவர்கள் 15.12.2013 அன்று கீரனூர் அருகே போக்குவரத்தை ஒழுங்குபடுத்தும் பணியில் ஈடுபட்டிருந்து போது ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 27.12.2013 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், பெரியமேடு காவல் நிலையத்தில் இரண்டாம் நிலை காவலராகப் பணி புரிந்து வந்த திரு. C.சத்தியசீலன் அவர்கள் 27.12.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், சிதம்பரம் நகர காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.வேல்முருகன் அவர்கள் 30.12.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. B.கோபி அவர்கள் 22.12.2013 அன்று தெற்கு வெள்ளூர் அம்பேத்கர் நகர் பாலம் அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி 1.1.2014 அன்று உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை உதவி ஆய்வாளர்கள் கணேசன், கோபி; சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ராஜா, பெரியசாமி, முருகன், சண்முகம்; தலைமைக் காவலர் வேல்முருகன்; இரண்டாம் நிலைக் காவலர் திரு. சத்தியசீலன், காவலர் ஜாஹீர் ஹுசைன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், தெற்கு வெள்ளூர் அம்பேத்கர் நகர் பாலம் அருகே 22.12.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் காவல் வாகனத்தில் பயணம் செய்த விருத்தாச்சலம் காவல் நிலைய முதல் நிலைக் காவலர்கள் திரு. ராஜசேகரன், திரு. செல்வகுமார், திரு. வாசுதேவன் மற்றும்

காவலர்கள் திரு. ஆனந்தகுமார் மற்றும் திரு. மகேஷ் ஆகியோர் காயமடைந்துள்ளனர் என்பதை அறிந்து நான் மிகவும் வருத்தமடைந்தேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு தலா மூன்று லட்சம் ரூபாயும், கடலூர் மாவட்டம், விருத்தாச்சலம் வட்டம், தெற்கு வெள்ளூர் கிராமம் அருகே, விருத்தாச்சலம் - கடலூர் சாலையில் 22.12.2013 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் பலத்த காயமடைந்த காவலர்களுக்கு தலா 25,000/- ரூபாயும் சாதாரண காயமடைந்தவர்களுக்கு தலா 10,000/- ரூபாயும் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9